**கூட்டுறவுச் சங்கங்களின் மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையம்**
**(அறிவிக்கை எண்:5/2020/மா.ஆ.நி., நாள்:16.06.2020)**

**விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகள்**

1) விண்ணப்பத்தினை பூர்த்தி செய்யும் முன்பாக விண்ணப்பதாரர்கள் காலிப்பணியிடங்கள் குறித்து 16.06.2020 அன்றைய தினத்தந்தி மற்றும் தினமணி நாளிதழ்களில் வெளியான கோயம்புத்தூர் மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையத்தின் அறிவிக்கையினை படிக்க வேண்டும்.

2) விண்ணப்பத்தினை விண்ணப்பதாரர் தனது சொந்த கையெழுத்தில் நீலம் அல்லது கருப்பு நிறப் பந்து முனைப் பேனா (Ball Point Pen) கொண்டு நிரப்ப வேண்டும்.

3) விண்ணப்பதாரர் தான் விண்ணப்பிக்கும் பதவிக்கான விண்ணப்பம் தானா என்பதனை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

4) விண்ணப்பதாரர் தனது பெயரினை தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் பெரிய எழுத்துக்களால் கல்விச் சான்றிதழில் குறிப்பிட்டபடி (Capiltal Letters) எழுத வேண்டும்.

5) 01.01.2020ல் 18 வயது பூர்த்தி அடைந்தவராக இருத்தல் வேண்டும். அதாவது 01.01.2002 அன்றோ அதற்கு முன்னர் பிறந்தவராக இருக்க வேண்டும்.

6) விண்ணப்பதாரர் தனது சொந்த ஊர், வட்டம் மற்றும் மாவட்டத்தினை தெளிவாக குறிப்பிட வேண்டும்.

7) விண்ணப்பதாரர் தனது நிரந்தர முகவரியினையும், தற்போது நேர்முக தேர்விற்கு அழைப்பு அனுப்பிட தொடர்புக்கான முகவரியினையும் தெளிவாக குறிப்பிட வேண்டும். இரண்டு முகவரியும் ஒரே முகவரியாக இருப்பினும் இரண்டிலும் முகவரியினை குறிப்பிட்டு எழுத வேண்டும்.

8) விண்ணப்பதாரர் அவருடைய அலைப்பேசி எண்ணை விண்ணப்பத்தில் எழுத வேண்டும்.

9) மனுதாரர் எந்த வகுப்பினை சார்ந்தவர் என்பதற்கான கட்டத்தினை ( ) செய்ய வேண்டும். மேலும் அதற்கான ஜாதி சான்றிதழ் நகலினை விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும்.
(அதாவது, இ.வ. இதர வகுப்பினர் (Other Community), பி.வ. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (Backward Class), பி.வ.முஸ்லீம். பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் முஸ்லீம் (Backward Class Muslim),மி.பி.வ /சீ.ம. மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர், (Most backward class / Denotified community), ஆ.தி ஆதி திராவிடர் (Scheduled Caste).

10) மனுதாரர் கல்வித்தகுதிக்கான கலத்தில் அவர் பட்டப்படிப்பு படித்தவராக இருந்தாலும், காலிப்பணியிடப் பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட கல்வித் தகுதியாக குறிப்பிட்டுள்ள பள்ளிப்படிப்புக்கான தேர்ச்சி விவரம், சான்றிதழ் எண், பயிற்று மொழி (Medium of Instruction) மற்றும் பயின்ற கல்வி மற்றும் கல்லூரியின் பெயர் விவரங்களை குறிப்பிட்டு பூர்த்தி செய்ய வேண்டும். விண்ணப்பத்துடன் விண்ணப்பிக்கும் பதவிக்கான கல்வித்தகுதியாக குறிப்பிட்டுள்ள கல்வித் தகுதியினை பெற்றுள்ளதற்கான தேர்ச்சி விவரத்திற்கான சான்றிதழ் நகலினை விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும்.

11) வேறு நிறுவனத்தில் ஏற்கனவே பணிபுரிந்தவர்களாக இருப்பின், இந்நேர்முகத் தேர்விற்கு விண்ணப்பித்திட தடையின்மைச் சான்று பெற்று நேர்முகத் தேர்வு அன்று சமர்ப்பிக்க வேண்டும்.

12) வேலை வாய்ப்பகத்தில் பதிவு செய்தவர்களாக இருப்பின், வேலை வாய்ப்பு அலுவலக பதிவு எண் விண்ணப்பத்தில் குறிப்பிடவும் மற்றும் வேலை வாய்ப்பு பதிவு சான்றின் நகலினை இணைத்து அனுப்பப்பட வேண்டும்.

13) மாற்றுத் திறனாளி, மற்றும் ஆதரவற்ற விதவை பிரிவை சார்ந்தவர்கள் கட்டண விலக்கிற்கு முன்னுரிமை கோருபவர்களில், மாற்றுத் திறனாளிகள் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலரிடமிருந்து சான்றிதழும், மருத்துவச் சான்றிதழும் பெற்றிருக்க வேண்டும். ஆதரவற்ற விதவைகள் வருவாய்க் கோட்ட அலுவலர் அல்லது உதவி ஆட்சியர் அல்லது சார் ஆட்சியரிடமிருந்து நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் சான்று பெற்றிருக்க வேண்டும். அச்சான்றின் நகலினை விண்ணப்பத்துடன் இணைத்தனுப்பப்பட வேண்டும். அசல் ஆவணத்தினை நேர்முகத் தேர்வு அன்று பரிசீலனைக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

14) இவை தவிர பிற சிறப்பு முன்னுரிமை கோரும் பிரிவைச் சார்ந்தவர் எனில் அதனை குறிப்பிட வேண்டும். உதாரணம் 1. கலப்பு மணம் புரிந்தவர் (இதில் தம்பதியரில் எனவேரனும் ஒருவர் ஆதிதிராவிடர் அல்லது பட்டியல் பழங்குடியின இனத்தை சார்ந்தவராக இருக்க வேண்டும்.) 2. பர்மா, இலங்கை அகதிகள்.

15) நியாயவிலைக் கடை விற்பனையாளர் பதவிக்கு விண்ணப்பிக்கும் நபர் விண்ணப்பக் கட்டணம் ரூ.150/-ஐம், நியாயவிலைக்கடை கட்டுநர் பணியிடத்திற்கு விண்ணப்பிக்கும் நபர் விண்ணப்பக் கட்டணம் ரூ.100/- கோயம்புத்தூர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மற்றும் அதன் கிளைகளில் மூன்று படிகள் கொண்ட செலுத்துச் சீட்டு (Triplicate challan) மூலம் செலுத்தி, அதில், செலுத்துச் சீட்டின் DRB நகலினை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பிட வேண்டும்.

16) கல்விச் சான்றிதழ், ஜாதி சான்றிதழ்,, கட்டண விலக்கு கோருபவர்களாக இருப்பின், அதற்கான சான்றிதழ் நகல்களை விண்ணபத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். நேர்முக தேர்வின் போது அனைத்து அசல சான்றிதழ்களையும் பரிலனைக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

17) 15.7.2020 பிற்பகல் 5.45 மணிக்குள் கிடைக்கும் வகையில் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர் / இணைப்பதிவாளர் மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையம், கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர் அலுவலகம், கோயம்புத்தூர் மண்டலம், ஆரோக்கியசாமி சாலை, கே.கே.புதூர், கோயம்புத்தூர் - 641 038 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். நேரிலும் விண்ணபத்தினை சமர்ப்பிக்கலாம்.

18) விண்ணபத்தில் குறிப்பிட்டிருக்கும் விண்ணப்பதாரரின் தகுதிகள் மற்றும் முன்னுரிமை தொடர்பான சான்றிட்ட நகல்கள் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். விண்ணபத்தில் விண்ணப்பதாரர் சரியான விவரங்களை குறிப்பிட வேண்டும். விண்ணபத்தில் தவறான தகவல்கள் ஏதேனும் குறிப்பிடப்பட்டுள்ளதாகத் தெரியவரின் விண்ணப்பதாரரின் விண்ணப்பம் எவ்வித முன்னறிவிப்புமின்றி நிரகாரிக்கப்படுவதோடு குற்றவியல் நடவடிக்கை எடுக்கவும் வழிவகுக்கும்.

19) விண்ணப்பதாரர் தங்களது விண்ணப்பத்தில் அதற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் அண்மையில் எடுக்கப்பட்ட விண்ணப்பதாரரின் கடவுச் சீட்டு அளவுள்ள கலர் நிழற்படத்தினை (Colour Photo) ஒட்டியும் அந்த நிழற்படத்தின் மற்றொன்றை தனியே உறையில் வைத்து விண்ணபத்துடன் இணைக்கப்பட வேண்டும். உறையில் வைத்து அனுப்பப்படும் நிழற்படத்தின் பின்புறத்தில் விண்ணப்பதாரர் தனது பெயர் மற்றும் விண்ணப்ப எண்னைச் பந்து முனைப் பேனாவால் குறிப்பிடப்பட வேண்டும். ரூ.22/-ற்கான அஞ்சல் வில்லை ஒட்டப்பட்ட சுய முகவரியிட்ட அஞ்சல் உறையினை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.